செ.வெ.எண்-03 நாள்-01.12.2020

# பத்திரிக்கைச் செய்தி.

அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில், உலக எய்ட்ஸ் தினம் மாவட்ட வருவாய் அலுவலர் **திரு.இரா.ஜெய்னுலாப்தீன்** அவர்கள் தலைமையில் இன்று (01.12.2020) அனுசரிக்கப்பட்டது.

ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் திங்கள் முதல் நாள் **உலக எய்ட்ஸ் தினம்** தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கம், மாவட்ட நிர்வாகம் மற்றும் மாவட்ட எய்ட்ஸ் தடுப்பு மற்றும் கட்டுப்பாடு அலகு சார்பில் அனுசரிக்கப்பட்டுவருகிறது. 2020-ம் ஆண்டின் கருப்பொருள் **"உலகளாவிய ஒற்றுமை, பொறுப்பை இப்பேரிடர் காலத்தில் பகிர்ந்துகொள்ளுதல்" "Global Solidarity Shared Responsibility"** ஆகும்.

இந்நிகழ்வில், உலக எய்ட்ஸ் தினத்தை முன்னிட்டு, அனைத்துத்துறை அலுவலர்கள் பங்கேற்ற உறுதிமொழி எடுக்கும் நிகழ்வு மற்றும் எய்ட்ஸ் உள்ளிட்ட விழிப்புணர்வை பொதுமக்களிடையே ஏற்படுத்தும் வகையில் கையெழுத்து இயக்கம் தொடங்கி வைக்கப்பட்டது.

அதனைத்தொடர்ந்து, எய்ட்ஸால் பாதிக்கப்பட்ட பெற்றோர்களின் 10ஆம் வகுப்பு மற்றும் 12ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் முதல் மூன்று மதிப்பெண்கள் பெற்றவர்களுக்கு ரொக்கப்பரிசுகளையும் மாவட்ட வருவாய் அலுவலர் அவர்கள் வழங்கினார்கள்.

**இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் அவர்கள் தெரிவித்ததாவது,**

தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கம் மற்றும் மாவட்ட எய்ட்ஸ் தடுப்பு மற்றும் கட்டுப்பாடு அலகு இணைந்து அரியலூர் மாவட்டத்தில் அனைத்து கல்லூரிகளிலும் செஞ்சுருள் சங்கம் ஏற்படுத்தப்பட்டு மாணவ / மாணவியர்களுக்கு 16 மணி நேர எச்.ஐ.வி மற்றும் பால்வினை நோய் குறித்த விழிப்புணர்வு கல்வி நடத்தப்பட்டுவருகிறது. எச்.ஐ.வி மற்றும் பால்வினை நோய் குறித்து சமூக ஊடகங்களான பண்பலைகள், முகநூல், ட்விட்டர், ஆன்லைன் (Webex, Zoom Meet) வினாடி வினா போட்டிகள், ஓவியப்போட்டி, கட்டுரைப்போட்டி, சுவரொட்டிகள், துண்டு பிரசுரங்கள் வாயிலாகவும் மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகிறது.

தமிழக அரசின் பல்வேறு நலத்திட்ட உதவிகளாக ஒவ்வொரு ஆண்டும் எச்.ஐ.வி பாதிக்கப்பட்ட/தொற்றுள்ள குழந்தைகளுக்கு ஊக்கத்தொகையும், கூட்டு மருந்து வாங்கிக்கொள்ள இலவச பேருந்து பயண அட்டை, உழவர் பாதுகாப்புத்திட்டத்தின் கீழ் மாதாந்திர உதவித்தொகை, விதவை உதவித்தொகை, இலவச தையல் இயந்திரம், பசுமை வீடு திட்டம், தாட்கோ கடனுதவி, இலவச கால்நடைகள் வழங்குதல், அந்தோதயா அன்னயோஜனா உள்ளிட்ட சலுகைகள் வழங்கப்பட்டுவருகிறது. நடப்பாண்டில் 90 நபர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளது. மாண்புமிகு முதலமைச்சரின் விரிவான காப்பீடு அட்டை 2 நபர்களுக்கும், மாதாந்திர உதவித்தொகைக்கான ஆணைகள் 8 நபர்களுக்கும் வழங்கப்பட்டது.

மேற்கண்டுள்ளவாறு பல விழிப்புணர்வு நிகழ்வுகளின் விளைவாக நமது மாநிலத்தில் கடந்த ஐந்து ஆண்டுகளில் கர்ப்பிணித்தாய்மார்களின் எச்.ஐ.வி தொற்று 0.18 சதவிகிதமாக உள்ளது. கடந்த இரண்டு ஆண்டுகளில் நமது அரியலூர் மாவட்டத்தில் கர்ப்பிணித்தாய்மார்களின் தொற்று 0.00 ஆக உள்ளது. மேலும், நமது மாவட்டத்தில் கடந்த இரண்டு ஆண்டுகளாக கர்ப்பிணி தாயிடமிருந்து பிறக்கும் குழந்தைக்கு எச்.ஐ.வி பாதிப்பு இல்லை.

மேலும், சமுதாயத்தில் எச்.ஐ.வி ஆல் பாதிக்கப்பட்ட நபர்களை புறக்கணித்தல் அல்லது ஒதுக்குதல் இல்லாமல் அவர்களை சகமனிதர்களை போல் அன்போடு அரவணைக்க வேண்டும் என மாவட்ட வருவாய் அலுவலர் **திரு.இரா.ஜெய்னுலாப்தீன்** அவர்கள் தெரிவித்தார்கள்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) ரவிச்சந்திரன், மாவட்ட எய்ட்ஸ் கட்டுப்பாட்டு அலுவலர் / துணை இயக்குநர் (சுகாதாரப்பணிகள்) மரு.வீ.சி.ஹேமசந்த்காந்தி, மாவட்ட மேற்பார்வையாளர் சுமதி, காவல் ஆய்வாளர் சுமதி, நலசங்கத்தலைவர் அலெக்சாண்டர் மற்றும் நம்பிக்கை மைய ஆலோசகர்கள், ஆய்வ நுட்புநர்கள், காசநோய் பிரிவு பணியாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**